# “மீண்டும் இலங்கை எரியும்” என்று சொன்னதை செய்த இந்திய இராணுவம்

வல்லரசுப் படுகொலையின் 17 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

1919 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 நாளன்று இந்தியாவில் அமிர்த சரஸ் நகரிலே ஜெனரல் டயர் தலைமையில் ஆங்கிலேய இராணுவம் நடாத்திய மனிதப் படுகொலையை விட மிகப் பயங்கரமான படுகொலையை 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2,3,4 ஆம் திகதிகளில் நடாத்தியிருக்கிறது. அகிம்சை வழி சுதந்திரம் கண்ட அண்ணல் காந்தியின் வழிவந்த காங்கிரஸ் கட்சி ஆட்சி புரிந்த இந்திய உப கண்டத்தின் இராணுவம்.

வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் நடாத்திய இப் படுகொலையை வியட்நாமில் இடம்பெற்ற மயிலாய படுகொலைக்குச் சமமாக ஒப்பிட்டிருக்கின்றார்.ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஜார்ஜ் பெர்னாண்டஸ். வியட்நாமிலே மயிலாய என்ற இடத்தில் அமெரிக்க இராணுவம் நடத்திய காட்டு மிராண்டித்தனமான படுகொலையை உலகமே கண்டித்தது.

ஆனால் வல்வெட்டித்துறையிலே இந்திய அரசு நடத்திய இப்படுகொலைச் சம்பவத்தை திட்டமிட்டு மறைத்தது.பெரும்பாலான இந்தியப் பத்திரிகைகளும் இப் படுகொலைச் சம்பவத்தை மறைப்பதில் இந்திய அரசுக்கு உறுதுணையாக நின்றன. ஆனால் இப் பயங்கர படுகொலைச் சம்பவம் நிகழ்ந்த 13 நாட்களுக்குப் பின் வல்வெட்டித்துறைக்குச் சென்ற லண்டன் பைனான் ஸியஸ் டைம்ஸ் பத்திரிகையின் டெல்லி நிருபர் டேவிட் கவுஸ்கோ இச் சம்பவம் பற்றிய குழு விபரங்களையும் முதன் முதலாக தமது பத்திரிகையில் வெளியிட்டதைக் கண்டு அகில உலகமே அதிர்ச்சியடைந்தது.

1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி காலை வல்வெட்டித்துறை சந்தைச் சதுக்கத்தில் எதிர்பாராத விதமாக விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்குமிடையே ஏற்பட்ட மோதலில் 6 இந்திய வீரர்கள் இறந்ததுடன் 11 பேர் காயமடைந்தனர்.

இதையடுத்து வல்வெட்டித்துறையைச் சுற்றியிருந்த மூன்று இராணுவ முகாம்களிலிருந்த ஆயிரக்கணக்கான இந்திய இராணுவத்தினர் வெறியுடன் புறப்பட்டு வல்வெட்டித்துறையைச் சுற்றி வளைத்தனர். உடனடியாக ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனத்தினர். மூன்று நாட்களுக்கு அச்சட்டம் நீடிக்கப்பட்டது. வீடுகளை விட்டு வெளியே வராமல் அச்சத்துடன் பதுங்கியிருந்த மக்கள் கதவுகளை உடைத்து உட்புகுந்த இராணுவம் பதறப் பதற சுட்டுக் கொன்றது. இந்த வெறியாட்டத்தில் 63 பேர் படுகொலை செய்யப்பட்டனர். நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமடைந்தார்கள். காயமடைந்தவர்களுக்கு மருத்துவ உதவி வழங்க முன்வந்த பிரான்ஸ் மருத்துவக் குழுவினரை ஊருக்குள் நுழையவே இராணுவம் அனுமதிக்கவில்லை.

மொத்தம் 123 வீடுகள் அடியோடு நாசமாக்கப்பட்டன.45 கடைகள் எரிக்கப்பட்டன.12 மீன்பிடிப் படகுகள் நாசம் செய்யப்பட்டன.176 மீன்பிடி வலைகள் எரியூட்டப்பட்டன. வீடுகளில் இருந்த பணம்,நகை, மின் உபகரணங்கள் இந்திய இராணுவத்தால் கொள்ளையடிக்கப்பட்டன. ஏராளாமான பெண்கள் பாலியல் வன்முறைகளுக்குள்ளாக்கப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சி நடப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் இந்திய பிரிகேடியர் சங்கர் பிரசாத் மக்கள் குழு உறுப்பினர்களை அழைத்து பின்வருமாறு கொக்கரித்தார்.இந்திய இராணுவம் மீது புலிகள் தாக்குதல் மேற்கொண்டால் உங்கள் ஊரை அடியோடு எரிப்பேன்.நூற்றுக்கணக்கில் மக்களைச் சுட்டுத்தள்ளுவேன்.இராமயணத்தில் இலங்கை எரிக்கப்பட்டது போல மீண்டும் இலங்கை எரியும். எங்களை யாரும் எதுவும் செய்ய முடியாது நாங்கள் உலகின் நான்காவது பெரிய இராணுவம்.

அவர் மிரட்டியதைப் போலவே சில நாட்களில் அழகிய வல்வெட்டித்துறை சுடுகாடானது. வல்வெட்டித்துறையால் மட்டுமல்லாமல் அங்கிருந்து 2 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஊரணி, பொலிகண்டி ஆகிய இடங்களிலும் இந்திய இராணுவத்தின் வெறியாட்டம் இடம் பெற்றது.

வுல்வெட்டித்துறையில் மூன்று நாட்கள் நாவேட்டை நடத்திய இந்திய இராணுவம் தனது வெறியாட்டத்தை திட்டமிட்டு மறைத்தது. ஜனதா தளப் பொதுச் செயலாளர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இப்பிரச்சினையை அம்பலப்படுத்துவதில் முன்னின்றார். இப் படுகொலை பற்றிய ஆதாரங்கள் புகைப்படங்கள் ஆகியவற்றைத் தொகுத்து ஆங்கிலத்திலும், தமிழிலும், இந்தியிலும் நூலாக வெளியிட்டு இந்தியாவில் மட்டுமல்ல உலகெங்கிலும் அம்பலப்படுத்தினார். இதனால் ராஜீவ் காந்தி அரசின் முகமூடி கிழிந்தது. ரட்சகர்கள் என எண்ணிய இந்திய இராணுவத்தின் இடைசபதம் வெளியானது.

**ஆதிகோவிலடி ஜெயம்**